2005 ஏப்ரல் 4] [பேரவைத் தலைவர்]

வேட்பு மனுப் படிவங்கள் வேண்டுவோர் பேரவைச் செயலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

வேட்பு மனுக்கள் *7–4–2005* வியாழக்கிழமையன்று பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும். விலகிக்கொள்ள விரும்புகின்ற வேட்பாளர்கள் *8–4–2005* வெள்ளிக்கிழமையன்று பிற்பகல் *3–00* மணிக்குள் வேட்பு மனுக்களைத் திரும்பப்பெறலாம். வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்யும் வேட்பாளர்களின் எண்ணிக்கை, வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு மேற்படுமாயின், *11–4–2005* திங்கட்கிழமையன்று காலை *10–00* மணிக்கும் பிற்பகல் *1–30* மணிக்கும் இடையே சட்டமன்றப் பேரவைச் செயலகத்திலுள்ள குழுக்கள் கூடும் அறையில் வாக்கெடுப்பு நடைபெறும்.

(ஆ) உறுப்பினர் இல்லாததால் கவன ஈர்ப்பு ஒத்திவைப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்புகள். திரு. தி. வேல் முருகன் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள். திரு. தி. வேல் முருகன். இருக்கையில் இல்லை. இன்னொரு நாள் எடுத்துக்கொள்ளப்படும்.

6. கவன ஈர்ப்பு

வேலூரில் நவீன பேருந்து நிலையம் அமைப்பதில் ஏற்படும் காலதாமதம்

முற்பகல் 11–35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சி. ஞானசேகரன் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் நகரில் கூட்டுறவுத் துறைக்குச் சொந்தமான மூடப்பட்ட பழத் தொழிற்சாலை உள்ள இடத்தில் நவீன, புதிய Bus Stand அரசாணைப்படி அமைக்கப்படாமல் காலதாமதம் ஏற்படுவதால் பொதுமக்களிடையே ஏற்பட்டுள்ள பதற்றநிலை குறித்து மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.